**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி.**

OS 94/2021

09.07.2025

**<u>வா.சா.1 கலைச்செல்வி க/பெ. சுப்ரமணியன் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

இன்று நீதிமன்றத்திற்கு என் கணவர் வந்துள்ளார். எனக்கு அவளிவநல்லூர் கிராமம் ஆகும். ரவி , விஜயலெட்சுமி எங்கள் ஊருக்கு பக்கத்து ஊரான செம்பியநல்லூர் ஆகும். வழக்கு சொத்தானது அவளிவநல்லூர் கிராமத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தானது நஞ்சை நிலமாகும். வழக்கு சொத்திற்கு அருகில் என் கணவருக்கு, சகோதரருக்கு என் குடும்பத்திற்கு சொந்தமான சொத்து உள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. பிரதிவாதி ரவி, விஜயலெட்சுமி குடுபத்திற்கும் வழக்கு சொத்துக்கு அருகில் நிலம் போர்செட்டுடன் நிலம் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தானது என் வீட்டிற்கு அருகில் உள்ளது என்றால் சரியல்ல சற்று தள்ளியுள்ளது. வழக்கு சொத்து என் கணவருக்கு எப்படி கிடைத்தது என்று தெரியாது. வழக்கானது 7 மா நிலத்திற்கு போடப்பட்டுள்ளது. வழக்கு சொத்தின் சர்வே எண் நினைவில்லை. வழக்கு சொத்தின் பட்டா என் பெயருக்கு எப்போது மாறியது என்றால் நினைவில்லை. அதுபற்றி என் கணவருக்கு தான் தெரியும் என்றால் சரிதான். பிரதிவாதி ரவி, விஜயலெட்சுமி பெயரில் ஏன் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் கணவர் ஆரம்பத்தில் வழக்கு சொத்தை விவசாயம் செய்துவந்தார் அவருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதால் பிரதிவாதிகள் வழக்கு சொத்தை எங்களிடம் கிரயம் கேட்டார்கள் நாங்கள் கிரயம் கொடுக்கவிருப்பமில்லை என்று சொன்னோம் அதன் பின்னர் சொத்தை அபகரித்துவிட்டதால் காவல் நிலையத்தில் புகார் அளித்தோம் காவல் நிலையத்தில் நீதிமன்றம் மூலம் பார்த்துகொள்ளுமாறு சொன்னார்கள் பிரதிவாதியிடமிருந்து சொத்தை மீட்டு கொடுக்குமாறு வழக்கு தாக்கல் செய்துள்ளோம். பிரதிவாதிகள் எப்போது கிரயம் கேட்டார்கள் என்றால் என் கணவரிடம் தான் கிரயம் கேட்டார்கள். எப்போது கிரயம் கேட்டார் என்றால் 2015 – 2016 ஆண்டுகளில் கேட்டார். இதுதொடர்பாக நான் புகார் கொடுக்கவில்லை என் கணவர் தான் புகார் கொடுத்தார். ஹரித்துவாரமங்கலம் காவல்நிலையத்தில் புகார் அளித்தார். ஹரித்துவாரமங்கலம் காவல்நிலையத்தில் புகார் அளித்தது தொடர்பாக ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் இது அடிதடிவழக்கு அல்ல நீதிமன்றத்தில் பார்த்துகொள்ளுமாறு சொன்னார்கள். வழக்கு தாக்கல் செய்தபின்பு பிரதிவாதிகள் எனக்கு அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். பிரதிவாதி அனுப்பிய அறிவிப்பில் என்ன சொல்லியுள்ளார்கள் என்று நினைவில்லை. வழக்கில் சொல்லியுள்ள 1427 பசலி வரை எங்கள் அனுபவத்தில் சொத்து இருந்துவந்தது என்பதற்கு என்ன ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சாட்சி தெரியாது என்கிறார். ஆனால்

கைவசம் ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் இல்லை. என் வழக்கு படி 2010 ல் என் கணவர் எனக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்தார் என்பதாகும். செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுப்பதற்கு முன்பு என் கணவர் வங்கியில் கடன்வாங்கியிருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் கணவர் கடன் வாங்கியது சம்பந்தமாக அவரிடம் தான் கேட்கவேண்டும். என் கணவரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்க நான் தயாராக உள்ளேனா என்றால் நிலத்தின் உரிமையாளர் நான் தான் அவரை விசாரிக்கவேண்டிய அவசியமில்லை என்கிறார் சாட்சி. நான் வழக்கு தாக்கல் செய்தபின்பு பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் உள்ள விபரங்களை நான் தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். அந்த பதிலில் என்ன சொல்லியுள்ளார்கள் என்று தெரியும் அது தவறாகும்.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

சார்பு நீதிபதி,

மன்னார்குடி